

பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் BS6 ரக 7 புதிய பேருந்துகளை தொடங்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஆட்சியர் ச.மிருணாளினி, மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, இரா.ப பரமேஷ்குமார், போக்குவரத்துக்கழக திருச்சி மண்டல பொது மேலாளர் டி.சதீஸ்குமார், நகர்மன்றத்தலைவர் திருமதி அம்பிகா இராஜேந்திரன், கோட்ட மேலாளர் ராம்குமார், பெரம்பலூர் கோட்ட துணை மேலாளர் (தொழில்நுட்பம்) எம்.எஸ்.ஜி.புகழேந்தி ராஜ், பெரம்பலூர் கிளை மேலாளர் தண்டாயுதபாணி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில் நடைபெற்ற வளைகாப்பில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் பரிசுப் பெட்டகங்களை வழங்கி வாழ்த்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், டாக்டர் குணசிங், அசோக் தியாகராஜன், டாக்டர் விஷ்ணுபிரியா, குட்டி க.புகழேந்தி, ஏ.ஏ.ஆறுமுகம் ஆகியோர் உள்ளனர்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! எம்.பரமசிவம் வரவேற்புரை!

# கந்தர்வக்கோட்டையில் துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா - பொதுக்கூட்டம்!

### திண்டுக்கல் ஐ.லியோனி - அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச. 18 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் இளைஞரணி சார்பாக தமிழ்நாடு துணை முதலமைச்சர்

உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கந்தர்வக்கோட்டையில்

மாபெரும் பொதுக்கூட்டம் 13.12.2025 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில் வெள்ளை முனியன் கோவில் திடல், கந்தர்வக்கோட்டையில் புதுக் கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.



கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.பரமசிவம் வரவேற்புரையாற்றினார். எம்.ராஜா, எம்.தவசுமணி, க.சுப்பிரமணியன், நியூஸ் ராஜேந்திரன், குஞ்சப்பா, ராஜேந்திரன், ரவிச்சந்திரன், ராதிகா கருப்பையா, எஸ்.கோவிந்தன், டி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர், கழக கொள்கைப் பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைபித்தன், தலைமைக் கழக இளம் பேச்சாளர் சொ.தமிழினியன், பட்டிமன்ற பேச்சாளர் பழனி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், தலைமைச் செயற்குழு உறுப்பினர்.கீரை.தமிழ்ராஜா, அன்னவாசல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எம்.ஜானகிராமன் அர்ச்சுணன், தாமரை குழ. பழனிவேல், வி.கோவிந்தராஜ், மு.ஆறுமுகம், எஸ்.கருணாநிதி, டி.சதீஸ் எம்.எம்.முருகேசன், மாரிமுத்து, கந்தர்வக்கோட்டை சதீஷ், வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் எம்.சண்முகம், இரா.முருகேசன், என்.அம்பிகாபதி, கழக முன்னோடிகள் எஸ்.ராமசாமி, சி.சுப்பிரமணியன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் வி.செல்லப்பிள்ளை, ஆரஞ்சு பாப்பா, குணசேகரன், தமிழ்ச்செல்வி, அருணாச்சலம், சசிகலா முருகேசன், ஒன்றில இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம்.நமச்சிவாயம், எஸ்.ஆனந்தராஜ், ஏ.வி.எஸ்.சுரேஷ், அழகு பிரகாஷ், சி.இளையராஜா, ராஜ அசோக் குமார், ராஜதுரை மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் ஏராள மானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.கலையரசன் நன்றி கூறினார்.

### திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் தலைமையில்

# அர.திருவிடம் புகழ்வணக்க நிகழ்வு! - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புகழஞ்சலி செலுத்துகிறார்!

திருவாரூர், டிச18-

கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில செயலாளர் மறைந்த அர.திருவிடம் அவர்களின் புகழ்வணக்க நிகழ்வு நாளை (19.12.2025 - வெள்ளி) மாலை 6.30. மணிக்கு திருவாரூர் காட்டூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற இருக்கிறது.

தமிழ்நாடு துணை முதல்வர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று அமரர் அர.திருவிடம் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்துகிறார். அப்போது கலைஞர் கோட்டத்தில் பூங்கா அமைக்கும் பணியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைக்கிறார். நிகழ்வுகளுக்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை ஏற்கிறார்.

அமரர் அர.திருவிடம் அவர்களின் புகழ்வணக்க நிகழ்விற்கு ஒன்றிய செயலாளர்கள் புலிவலம் ஏ.தேவா, ஆர்.பாலச்சந்தர், சேகர் கலியபெருமாள், மாவட்ட பொருளாளர் மு.வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், நகர செயலாளர் வாரை. எஸ். பிரகாஷ் ஆகியோர் முன்னிலை ஏற்கின்றனர்.

கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், தடக்கோ தலைவர் நா.இளையராஜா, முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அ.அசோகன், மற்றும் மாநில கலைஇலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகளுடன் மாவட்ட அமைப்பாளர் ராஜ் என்கிற கருணாநிதி உள்ளிட்டோர் பங்கேற்று புகழுரையாற்றுகின்றனர்.

வழக்கறிஞர் செழியன் திருவிடம் நிகழ்விற்கு நன்றியுரையாற்றுகிறார்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை வடக்கு ஒன்றியம் இராஜேந்திரம் ஊராட்சியில் பூத் எண் 157,158,159 ஆகிய வாக்குச்சாவடிகளில் நடைபெற்ற "என்_வாக்குச்சாவடி_வெற்றி_வாக்குச்சாவடி" ஆலோசனைக் கூட்டத்தில் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஆகியோர் கலந்து கொண்டு பிரச்சார பரப்புரையை தொடங்கி வைத்தனர். இதில் புண்ணியமூர்த்தி, உஷா மற்றும் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ2, பி.டி.ஏ, பி.எல்.சி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் மத்திய ஒன்றியம் திருக்கடையூர் அருகே நட்சத்திர மாலை கிராமத்தில் வசிக்கும் 3 ஏழைக் குடுபத்திற்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில் கழகத்தின் சார்பில் தையல் இயந்திரத்தை மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் அமிர்த.விஜயகுமார், எம்.அப்துல்மாலிக், பஞ்சு.குமார், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.


## D.T.P. ஆப்பரேட்டர்கள் -- போட்டோஷாப் மற்றும் பிழை திருத்துநர்கள் தேவை !

முரசொலி கணினிப் பிரிவில் பணிபுரிய 'போட்டோஷாப்' (LAYOUT) பணியில் நன்கு தேர்ச்சி பெற்ற D.T.P. ஆப்பரேட்டர்கள் மற்றும் முன் அனுபவம் மிக்க பிழை திருத்துநர்கள் (PROOF READERS) பகல் மற்றும் இரவுப் பணிகளுக்கு (ஆண்கள், பெண்கள்) தேவை. தகுந்த சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :–

பொது மேலாளர்

'முரசொலி' – நாளிதழ்

180, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,

சென்னை – 600 034.


## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்க (பதிவு எண் 296/NLG, பேரவை இணைப்பு எண். 1087) நீலகிரி மண்டல பணிமனைகள் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தலை நடத்திட பேரவைச் செயலாளர் திரு. **ஆர்.பெரியசாமி** அவர்கள் தேர்தல் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டு ஏற்கெனவே பேரவையால் அறிவிப்பு செய்யப்பட்டது. அதன்படி தேர்தல் ஆணையாளரால் வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு கீழ்க்கண்ட தேர்தல் அட்டவணை, விதிமுறைகளின்படி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

**தேர்தல் கால அட்டவணை**

**பணிமனை நிர்வாகிகள் தேர்தல்**

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள் தோறும்) – 18.12.2025 காலை 11.30 மணி

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள் தோறும்) – 20.12.2025 காலை 11.00 மணி

வேட்பு மனு படிவம் வழங்குதல் – 20.12.2025 மதியம் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

வேட்பு மனு தாக்கல் – 21.12.2025 காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை

வேட்புமனு பரிசீலனை – 21.12.2025 மதியம் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் – 21.12.2025 மாலை 6.00 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல் – 22.12.2025 காலை 12.00 மணி வரை

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் – 22.12.2025 மாலை 4.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு (பணிமனைகள்தோறும்) – 27.12.2025 காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

**மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்**

வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகளில் வெற்றி பெற்றவர்கள்) – 29.12.2025 காலை 9.00 மணி

வேட்பு மனு படிவம் வழங்குதல் – 29.12.2025 காலை 9.30 மணி

வேட்பு மனுத்தாக்கல் – 29.12.2025 காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

வேட்பு மனு பரிசீலனை – 29.12.2025 மதியம் 2.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை

தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் – 29.12.2025 மாலை 3.30 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல் – 29.12.2025 மாலை 4.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் – 29.12.2025 மாலை 5.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு – 30.12.2025 காலை 9.00 மணி முதல் காலை 11.00 மணி வரை

வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

**குறிப்பு:–**

1) பணிமனை தேர்தலுக்கு உரிய வேட்பு மனு படிவம் வழங்குதல், வேட்பு மனு தாக்கல், மனு பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் நீலகிரி மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் நடைபெறும். வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை, முடிவுகள் அறிவித்தல் அந்தந்த பணிமனைகளில் ஒதுக்கப்படும் இடத்தில் நடைபெறும்.

2) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் தொடர்பான அனைத்து நடைமுறைகளும் நீலகிரி மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் நடைபெறும்.

16.12.2025 **மு.சண்முகம்**,

இடம் : கலைஞரகம் பொதுச்செயலாளர்,

தொ.மு.ச. பேரவை